**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்**

| 2022-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 7-ம் நாள் புதன்கிழமை வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1869ம் ஆண்டு சட்ட எண் 44வது பிரிவு 6(1)ன் பிரிவின்படி உதவியாளர் திரு.சிவா என்பவரால் உறுதி பிரமானம் செய்யப்படுகிறது. | | | |
|---|---|---|---|
| பெயர்: | மாசாணம் | தொழில் : | |
| த.பெ: | மாயாண்டிசேர்வை | சமயம் : | |
| கிராமம்: | | சாதி : | |
| வட்டம்: | | வயது: | |

**7.12.2022 OS No.109/2019 வா.சா.1** மாசாணம் **ஆஜர்**

**முதல் விசாரணை:**

1. நான் இந்த வழக்கின் வாதி ஆவேன். வாதி தரப்பு 1ம் சாட்சியாக சாட்சியம் அளிக்கிறேன். என் தரப்பில் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை படித்து காண்பித்து பின்பு நான் அதில் கையெழுத்து செய்துள்ளேன். பிராமண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். 16.3.2008ம் தேதியிட்டு அங்குநாதன் வகையறாவிடமிருந்து தாவா 1ம் லக்க சொத்தை நான் கிரையம் பெற்ற கிரைய ஆவணம் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். **(கிரைய ஆவணம் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

2. 29.9.2011ம் தேதியிட்டு ஜெயராஜ் என்ற ஜெயராமன் வகையறாவிடமிருந்து தாவா 2ம் லக்க சொத்தை நான் கிரையம் பெற்ற கிரைய ஆவணம் அசல் தாக்கல் செய்கிறேன். **(கிரைய ஆவணம் வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.) 20**.6.2014ம் தேதியிட்டு மாயாண்டி தாவா 3ம் லக்க சொத்தை பொறுத்து எனக்கு எழுதி கொடுத்த பட்டா பாத்திய விடுதலை பத்திரம் அசல் தாக்கல் செய்கிறேன். **(பட்டா பாத்திய விடுதலை பத்திரம் வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

**3.** தாவா சொத்துக்களுக்கு என் பெயரிலுள்ள கணினி பட்டா இணையவழி பதிவிறக்க நகல் (3 எண்ணம்) தாக்கல் செய்கிறேன். **(பட்டா வா.சா.ஆ.4 வரிசை (3 எண்ணம்)ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** தாவா சொத்துக்களுக்கு நான் செலுத்திய வரி ரசீது அசல் தாக்கல் செய்கிறேன். **(வரி ரசீது வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** 28.8.2017ம் தேதியிட்டு நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் தாக்கல் செய்கிறேன். **(வழக்கறிஞர் அறிவிப்பு வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** 27.12.2017ம் தேதியிட்டு நான் மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் கொடுத்த புகார் மனு கை நகல் தாக்கல் செய்கிறேன். **(புகார் மனு வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** தாவா சொத்துக்களுக்கு நான் செலுத்திய வரி ரசீதுகள் (3 எண்ணம்) அசல் தாக்கல் செய்கிறேன். **(வரி ரசீதுகள் வா.சா.ஆ.8 வரிசை (3 எண்ணம்) ஆக குறியீடு செய்யப்படுகிறது.) நீதிமன்ற**

ஆணையர் தாவா சொத்தை பார்வையிட்டு அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்துள்ளார். **(நீதிமன்ற ஆணையர் அறிக்கை நீ.சா.ஆ.1 ஆகவும் வரைபடம் நீ.சா.ஆ.2 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.)** பிராதுப்படி தீர்ப்பு செய்ய வேண்டுமாய் பிரார்த்திக்கிறேன்

**(வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)**

Taken down by me in open court
read over/ interpreted to the witness
in Tamil and acknowledged by him,
her to be correct.

District Munsif Cum
Judicial Magistrate,
Thiruppuvanam.